


சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட காடையாம்பட்டி, கிழக்கு, மேற்கு ஒன்றியத்தில் சேலம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர். டி.எம். செல்வ கணபதி மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் பன்னப்பட்டி, மாரகவுண்டன்ப புதூர், தின்னப்பட்டி உட்பட 50 கிராமங்களில் வாக்காளர்களுக்கு. நன்றி தெரிவித்தார்கள். உடன் ஒன்றியச் செயலாளர்கள். கே.சி. அறிவழகன், கே.சி.ரவிச்சந்திரன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் இருந்தனர்.



சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி மேற்கு ஒன்றியம் நல்லான் பிள்ளை பெற்றாள் ஊராட்சியில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் நிறைவு விழாவை முன்னிட்டு நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி ஆகியோர் கலந்துகொண்டு 1200 பயனாளிகளுக்கு ரூ 6.00 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் சிற்றரசு, விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், துணை சேர்மன் ஜெயபாலன் உள்ளனர்.

# தேனி வடக்கு மாவட்ட பொது உறுப்பினர் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. அறிக்கை!



தேனி, ஆக. 24 -

தேனி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடந்த 16.8.2024 அன்று நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி தேனி வடக்கு மாவட்ட கழக பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றிய, நகர, பேரூர் அளவில் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இடங்களில் நடைபெற இருக்கின்றது.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக பொது உறுப்பினர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நிகழ்ச்சி நிரல் விபரம்

25.08.2024-மாலை 4.00 மணி-போடிநாயக்கனூர் நகரம் வர்த்தகர் சங்கம் பொன்விழா மண்டபம்,மாலை 6.00 மணி-பெரியகுளம் நகரம்-கோவிந்தன் மயில்தாயம்மாள் மஹால், 26.08 .2024 -காலை 10.00 மணி-தேனி வடக்கு ஒன்றியம்,-சமுதாய கூடம் - குப்பி 0நாயக்க ன்பட்டி, காலை 11.00 மணி- பழனிசெட்டி பட்டிபேரூர்- சீனிவாச பெருமாள் கோவில் மண்டபம், மாலை 4.00 மணி-தேனி அல்லி நகரம் NRT மண்டபம்- தேனி,காலை 9.00 மணி - வடுகபட்டி பேரூர்- வேளாளர் மண்டபம்,காலை 10.00 மணி-பெரியகுளம் வடக்கு ஒன்றியம்- சந்தனகோவில்மண்டபம் சில்வார்பட்டி

27.08.2024-காலை 11.00 மணி - தேவதானப்பட்டி பேரூர்-ஜெயராஜ் மண்டபம்,காலை 12.00 மணி - கெங்குவார்பட்டி பேரூர்- SPT மண்டபம்,மாலை 3.00 மணி - பெரியகுளம் தெற்கு ஒன்றியம்-NRT மண்டபம்- லட்சுமிபுரம், மாலை 4.00 மணி -தென்கரை பேரூர் -தனுஸ்கோடி மண்டபம், மாலை 5.00 மணி- தாமரைக்குளம் பேரூர்- வ.உ.சி மண்டபம்,

காலை 10.00 மணி- போடி மேற்கு ஒன்றியம்- ஸ்ரீநிவாச பெருமாள் கோவில்-மண்டபம் சிலமலை

காலை 11.00 - மேலச் சொக்கநாதபுரம் பேரூர்- கருப்பசாமிகோவில்மண்டபம், மாலை 3.00 மணி-

போடி கிழக்கு ஒன்றியம்- S K மஹால் - உப்பு கோட்டை.

28.08.2024-மாலை 4.00 மணி-பூதிப்புரம் பேரூர் - சுருளி பெருமாள் ஊஞ்சாலம்மாள் திருமண மண்டபம், மாலை 5.00 மணி -மீனாட்சிபுரம் பேரூர்- கண்டீஸ்வரி அம்மன்- கோவில் சமுதாய கூடம், 29.08.2024-காலை 10.00- தேனி தெற்கு ஒன்றியம்- தனலட்சுமி மஹால்-வீரபாண்டி, காலை 11.00 மணி- வீரபாண்டி பேரூர்- PSA லட்சுமி மஹால், மாலை 3.00 மணி- சின்னமனூர் மேற்கு ஒன்றியம்- கோகுல் மண்டபம்-சங்கராபுரம், மாலை 4.00 மணி-குச்சனூர் பேரூர்-நாயுடு மண்டபம்-குச்சனூர், மாலை 5.00 மணி-மார்க்கையன்கோட்டை பேரூர் -

கோவில் பேரூராட்சி கல்யாண மண்டபம்

பொருள்: 1.கழக முப்பெரும் விழா கொண்டாடுதல். 2. கழகக் கொடி ஏற்றுதல், (50 இடங்களில் 3. சார்பு அணி நிர்வாகிகள் நியமனம், 4. கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு தங்கதமிழ்செல்வன் எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திணைக் குளம் ஊராட்சியில் திணை குளம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 10, லட்சம் மதிப்பிலான புதிய நியாய விலை கடை கட்டுமான பணியினை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், துவக்கி வைத்தார் இந்நிகழ்வில் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், ஊராட்சி மன்ற தலைவர் வழக்கறிஞர் தேவராஜன், ஒன்றிய கவுன்சிலர் நதியா மனோகரன், மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க . இளைஞரணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் முன்னிலை: அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, ஆக. 24 -

தூத்துக்குடி வடக்கு - தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பேச்சுப்போட்டி கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி. மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி, கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி இன்று (24.08.2024 -சனிக்கிழமை) காலை 9.00மணி அளவில் தூத்துக்குடி கலைஞர் அரங்கம் பின்புறம் உள்ள லெட்சுமி மஹாலில் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளராகிய எனது (பி.கீதாஜீவன்)தலைமையில், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற இருக்கிறது.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் விளாத்திகுளம் ஜி.வி.மார்க்கண்டேயன் ஓட்டப்பிடாரம் எம். சி..சண்முகய்யா, மாநகர செயலாளர் எஸ்.ஆர். ஆனந்தசேகரன், மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட ஊராட்சி தலைவர் உ. பிரம்மசக்தி, மாநில இளைஞரணி துணை செயலாளர் இன்பாரகு ஆகியோர் வாழ்த்துரை வழங்க இருக்கிறார்கள். தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.எம்.மதியழகன் வரவேற்புரை ஆற்றுகிறார். தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.எம்.இராமஜெயம் நன்றியுரை ஆற்றுகிறார்.

பேச்சுப்போட்டியின் நடுவர்களாக வே.மதிமாறன், புதுகோட்டை விஜயா, இந்திரகுமார் தேரடி, பொள்ளாச்சி உமாபதி, சிவ.ஜெயராஜ், மில்டன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். தூத்துக்குடி வடக்கு தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கழக அளவிலான இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பேச்சுப் போட்டியிக்கு பதிவு செய்துள்ள மாணவ - மாணவியர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

# இராமநாதபுரம் மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு

இராமநாதபுரம் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட மு.இளங்கோ அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகிப்பதால், அவரை மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **அப்துல் ரஹ்மான்** (6/150, பனையங்கால், கும்பிடுமதுரை அஞ்சல், கீழக்கரை தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்) அவர்கள் இராமநாதபுரம் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகளுடன் இணைந்து இவர் கழகப் பணியாற்றுவார்.

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **டி.செங்குட்டுவன்** |
| சென்னை - 18 | செயலாளர் |
| நாள்- 23.08.2024 | தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி |

### பொதுப் பிரிவு மருத்துவப் படிப்பு கலந்தாய்வில்

# எஸ்.சி., எஸ்.டி. பிரிவினர் பங்கேற்பதை தடுக்க முடியாது!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, ஆக. 24 -

இதர பிற்படுத்தப்பட்டவர்கள், ஆதி திராவிட மற்றும்பழங்குடி இன பிரிவினர், பொதுப்பிரிவு மருத்துவப்படிப்பு கலந்தாய்வில் கலந்து கொள்வதைத் தடுக்க முடியாது என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் மருத்துவப் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 5% இட ஒதுக்கீடு கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது.

ஆனால், எஸ்.சி., எஸ். டி. மற்றும் ஓ.பி.சி. பிரிவை சேர்ந்த மாணவர்கள் இந்த பிரிவிலும், பொதுப் பிரிவிலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை என்று கூறி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர். கவாய், கே.வி. விஸ்வநாதன் அமர்வு, விசாரித்தது.

பொதுப்பிரிவு என்பது அனைத்துப் பிரிவினருக்கும் உட்பட்டதுதான் என்று உச்சநீதிமன்றம் ஏற்கனவே தெளிவுபடுத்தியதை சுட்டி க்காட்டிய நீதிபதிகள், இதர பிற்படுத்தப்பட்டவர்கள், ஆதி திராவிட மற்றும்பழங்குடி இன பிரிவினர் பொதுப்பிரிவுப் படிப்பு கலந்தாய்வில் கலந்து கொள்வதைத் தடுக்க முடியாது என்று தெரிவித்தனர்.

மெரிட் அடிப்படையில் அவர்கள் தகுதி பெற்றவர்களா இல்லையா என்பதைதான் நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், மெரிட் மதிப்பெண் உள்ள அனைத்து மாணவர்களும் பொதுப் பிரிவு கலந்தாய்வில் கலந்து கொள்ள எந்த தடையும் இல்லை என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைஅமைப்பாளராக நியமிக்கப்பட்ட சந்திரசேகர், மாவட்ட இலக்கிய அணி துணைஅமைப்பாளராகவும் பொறுப்பு வகிப்பதால், அவரை மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, **டி.தயாளன்,** (125, சோழா ரியல் எஸ்டேட், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை மாவட்டம்) அவர்கள் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகிகளுடன் இணைந்து இவர் கழகப் பணியாற்றுவார்.

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **வாகை சந்திரசேகர்** |
| சென்னை - 18 | தலைவர் |
| நாள்- 23.08.2024 | தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை |

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திமிரி நா. சீனிவாசன்
### ஆகஸ்ட் 24 (2018)



தனது இளம் வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக திமிரி ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் அ.மு. அசன் முகம்மது
### ஆகஸ்ட் 24 (2016)



இளம் வயதிலேயே திராவிட இயக்கத்தின்மீது பற்று கொண்டு, மாவட்டப் பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட வழக்கறிஞர் அணிப் புரவலர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

கவிதை, கட்டுரை எழுதுவதில் வல்லவரான இவர், மிசா நெருக்கடி காலத்தில், கழக நாளேடான 'முரசொலி'யில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர்.

திருவாரூர் மாவட்டம், அத்திக்கடை ஊராட்சி துணைத் தலைவராக பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.